BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# பழங்குடிகள் – நாடோடிகள் - அலைகுடிகள் : சொல்லாடல்களின் நுண்அரசியல்

முனைவர் சே. பாலகிருஷ்ணன்
உதவிப்பேராசிரியர் தமிழ் உயராய்வு மையம் அமெரிக்கன் கல்லூரி மதுரை 625002
மின்னஞ்சல்: balakrishnans@americancollege.edu.in

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாற்றுக் காலந்தொட்டு மனித சமூகம் பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பின்னணியில் வாழ்ந்து வந்துள்ளது எனச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். உலகின் ஒரு புறம் நாகரிக வளர்ச்சி பெற்று மக்களிடையே சமூக, சமய, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டு புதிய நாகரிக வாழ்க்கை உருவாக வகை செய்த அதே சமயம் நாகரிக வளர்ச்சியுடன் இணையாது தனித்தனிக் குழுக்களாக காடுகளிலும், மலைகளிலும், பனி படர்ந்த பகுதிகளிலும், தீவுகளிலும் குழுக்கள் குழுக்களாகத் தனிமைப்படுத்தப்பட்டு ஏனைய மக்களோடு தொடர்புகளற்று தமக்கே உரித்தான தாம் வாழும் பகுதிகளுக்கேற்ப பொருளாதார, சமூக, பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றி ஒரு இனம் /கூட்டம் / தொகுதியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களையே சமூகவியலாளர்கள் மானிடவியலாளர்கள் பழங்குடிகள் என்று அழைக்கின்றனர். இலக்கியங்களில் சமூகத்தில் உயர்நிலையில் இருப்பவர்களை மட்டுமே பதிவு செய்துள்ள நிலையில், சமூக, பொருளாதார நிலையில் தன்னிறைவு பெறாத இனக்குழுக்களின் வாழ்வியலுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பெறாது பெயரளவில் மட்டுமே பேசுவனவாக அமைந்திருக்கின்றன. குறிப்பாக, ஆதிவாசிகள், மலைவாசிகள், பழங்குடிகள், நாடோடிகள், அலைகுடிகள் மற்றும் ஏதிலிகள் என அழைக்கப்பெறும் பூர்வகுடிகளின் வாழ்வியல் பற்றி விரிவாக ஆராயப்படவும் பேசப்படவும் வேண்டிய தேவையிருக்கிறது. இதன் ஒரு பகுதியாக அண்மைக் காலமாக தமிழாய்வுப் பரப்பில் உள்ளூர் பண்பாட்டு வரலாறும், சாதியப் பண்பாட்டு வரலாறும் மீளாக்கம் பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு முயற்சிகளில் பழங்குடி இனங்கள் குறித்த பதிவுகள் பெருமளவில் வெளிவந்திருக்கின்றன. அந்த வகையில் தமிழ் நிலப் பரப்புகளில் சித்திரிப்பு பெறும் பழங்குடிகள் - நாடோடிகள் - அலைகுடிகள் குறித்த சொல்லாடல்கள் அவதானிப்புகளையும், அதன் நுண் அரசியலையும் இக்கட்டுரை முன்வைக்கிறது.

**திறவுச் சொற்கள் (Keywords):** பழங்குடிகள், பண்பாடு, வரலாறு, நாடோடிகள், அலைகுடிகள்

**முன்னுரை**

பழங்குடி மக்கள் என அழைக்கப்படும் பின்தங்கிய சமூகம் உலகின் எல்லாக் கண்டங்களிலும் வாழ்ந்து வருகின்றது. குறிப்பாக, உலகில் நிலவுடைமை மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் உருவாவதற்கு முன்னர் பழங்குடி மக்கள் தங்களுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொண்டும் தேடியும் வாழ்ந்திருக்கின்றனர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஒவ்வோர் இனமும் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்து வருவதைப் போல பழங்குடிகளும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்கின்றனர். இந்தியாவில் 1971 ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடிகள் 41,147,922 ஆகும். நமது நாட்டின் விடுதலைக்குப் பிறகு பழங்குடி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு அரசியலமைப்பில் தனிச் சலுகைகளையும் பல்வேறு திட்டங்களையும் ஏற்படுத்தியதன் மூலம் அவை நிறைவேறியதா? என்பது ஆய்வுக்குரியதாகும். அதே சமயம் பழங்குடிகள் தனித்தனிக் குழுக்களாக வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது பற்றியோ அல்லது இவர்கள் ஏன் தனிமையாக வாழப் பழகினார்கள் என்பது பற்றியோ மிக விரிவான முழுமையான ஆய்வுகள் கிடைக்கப்பெறவில்லை என்றே கூறலாம். அவர்கள் பழங்குடிகள், ஆதிவாசிகள், வனவாசிகள், நாடோடிகள், காட்டுவாசிகள், மலைவாசிகள், ஏதிலிகள், அலைகுடிகள் என்று

பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். இவ்வெவ்வேறு பெயர்கள் ஒரே சமூகத்தில் உள்ள மக்களை குறிக்கப் பயன்படுகிறதா? அல்லது வெவ்வேறு சமூகத்தில் உள்ள மக்களைச் சுட்டுகிறதா? என்பதனை விளக்குவதோடு இச்சொல்லாடல்களின் நுண் அரசியலை ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

**பழங்குடிகள் : விளக்கமும் வரையறைகளும்**

பழங்குடியைக் குறிக்கும் ‘Tribe’ என்கிற சொல்லாடல் ஆங்கிலக் காலனியர்களால் உருவாக்கப்பட்டது. வெரியர் எல்வின், லூயிஸ் போன்றோர் Tribe என்பதற்கு ‘நாகரிகத்தில் பின்தங்கியவர்கள்’ என்று பொருள் தருகின்றனர். பிரித்தானிய கலைக்களஞ்சியம் பழங்குடியினர் எனப்படுவோர், ‘தமக்குள்ளே ஒத்த மொழி பேசுகின்ற ஒரு சிறிய அமைப்புடைய குழுவாகும்’ என்கிறது. பேராசிரியர் சீனிவாசவர்மா “ஒரு மொழி பேசுகின்ற பலருள்ளும் ஒன்றிருக்கின்ற பழைய பழக்க வழக்கங்களைப் பாதுகாத்து வருகின்ற ஓர் எளிய சமூகத் தொகுப்பே பழங்குடிகளாகும்”(1978:1) என்கிறார். மாகஜ் வெபர் என்பார் ‘பழங்குடி என்பது பல உள்ளடக்கங்களை உடையது’ என்கிறார். அதாவது, குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்தல், சிறப்புத்தன்மையற்ற வேலை, சமூகப் பார்வையில் பின்தங்கியிருத்தல், வேறு பழங்குடிகளுடன் விவாகத் தொடர்பு வைத்திருத்தல் (தமது இனத்துள்), தமது பண்பாட்டுக்கேற்ப சட்டத்திட்டங்களை உருவாக்குதல் போன்றன பழங்குடிகளின் குணாம்சங்கள் என்கிறார். ,“பழங்குடி என்ற சொல் முதன்முதலில் எரேபியர்களைக் குறிக்கப் பயன்பட்டது” என்று பக்தவத்சல பாரதி தமது ‘பண்பாட்டு மானுடவியல்’ நூலில் குறிப்பிடுகிறார் (2013:267) மேலும், பழங்குடி என்பதற்கு ‘பொதுவாகப் பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில், ஒருவருக்கொருவர் கட்டுப்பாடுடனும், பொருள்களைப் பரிமாறிக் கொண்டு வாழும் பல குடும்பங்களின் தொகுப்பே பழங்குடி” (மஜூம்தார்,2016: 217) என்றும், ‘தனிமையாக்கப்பட்ட உயிரின வாழ்க்கைச் சூழல்படியும், சமூகநிலைப்படியும், பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழல்படியும், மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட மனித இனக்குழுவே பழங்குடி” (சு.ராஜேந்திரன், 2008: 24) என்றும் வரையறைகள் தரப்படுகின்றன.

பழங்குடி மக்களை பூர்வகுடி மக்கள், மூத்த குடிகள் என்று அழைப்பதும் உண்டு. மிகப் பழமையான வாழ்க்கை முறையினையும் குடியமைப்பினையும், தனக்குரிய பண்பாட்டு அடையாளத்துடன் தனித்துவத்துடன் இருந்திருப்பதால் அச்சமூகத்தினைப் பழங்குடி என அழைத்திருக்கலாம். பொதுவாக மக்கள் தொடர்பின்றி காடுகளையும் மலைப்பகுதிகளையும் சார்ந்து வாழ்பவர்கள் என்றாலும், பிற சமூகத்தினரைச் சார்ந்து வாழ்பவர்கள் அல்லர். சுயசார்புடன் இயற்கையுடன் ஒன்றிணைந்த வகையில் இவர்களுடைய வாழ்வாதார முறைகள் அமைந்திருக்கின்றன.

**பழங்குடிகள் - சொல்லாடல்களின் விவரணைகள்**

பக்தவத்சல பாரதி தமிழகப் பழங்குடிச் சமூகங்களை மூன்று வகையினங்களாகப் பிரித்து அடையாளப்படுத்துகிறார்.

**தொல்பழங்குடியினர்(AboriginalTribes)**

இம்மக்கள் வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டு தம் வாழிடங்களில் இடப்பெயர்ச்சி ஏதுமின்றி வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி சமய, வாழ்வியல் கூறுகளைக் கொண்டுள்ளனர். (காடர், தோடர், இருளர், பளியர், காட்டுநாய்க்கர், கோத்தர் போன்றோர்).

**முதுகுடியினர்(PrimitiveTribes)**

இம்மக்கள் தம் வாழிடங்களில் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தோற்றத் தொன்மங்களில் சாதியத்தின் முன் வடிவம் காணப்படுகின்றது. (தொதவர், கோத்தர், குறும்பர் ஆகிய மூவரும் கடவுளின் வியர்வைத் துளிகளிலிருந்து பிறந்த உடன்பிறந்தோர்எனும்தோற்றத்தொன்மம்)

**பழங்குடியினர்(Tribes)**

ஏதாவது நெருக்கடிகளின் (அரசியல், வறுமை (பஞ்சம்), நோய்) காரணமாக சமவெளிப் பகுதியிலிருந்து மலைப்பகுதிகளுக்கோ அல்லது வேறு பிரதேசத்துக்கோ இடப்பெயர்ச்சி செய்து அங்கேயே தங்கிவிட்டவர்கள் (மலையாளி, முதுவர், பளியர், மலைப்பண்டாரம், கணியான், அடியான், குறுமன், கொரகர், காட்டு நாயக்கர், குறிச்சான் போன்றோர்) பூர்வீகத்தில் வழிபட்ட சைவ வைணவக் கடவுள்களைத் தற்போதும் வணங்கி வருகின்றனர். குறிப்பாக மலையாளி பழங்குடியினரிடையே நிலப்பிரபுத்துவ அமைப்பு இன்னும் நிலைபெற்றுள்ளது.

இவை தவிர பெரும்பான்மையோர் பழங்குடிகளை ஆதிவாசிகள், காட்டு வாசிகள் எனவும், இலக்கியப் பின்புலம் சார்ந்தவர்கள் மலையின மக்கள், மலைவாழ் மக்கள், தொல்குடி,

ஆதிகுடி, முதுகுடி, பூர்வகுடி எனவும் அஹிம்சைவாதிகள் 'கிரிஜன்' எனவும் குறிப்பிடுகிறார்கள். கல்விசார் சூழலில் பழங்குடி பற்றிய சொல்லாட்சி வேறு வகையாக மாறுகின்றது. எட்கர் தர்ஸ்டனின் 'Caste and Tribes of Southern India' நூல் வரிசையினை மொழி பெயர்த்த பேராசிரியர் க. ரத்னம் 'குலங்களும் குடிகளும்' எனவும் மார்க்சியவாதிகள் 'இனக்குழு' எனவும் மானிடவியலாளர்கள் 'பழங்குடி' எனவும் கூறுகிறார்கள்.

**நாடோடிகள் - பெயர் விளக்கம்**

ஒரு குறிப்பிட்ட வாழிடத்தைக் கொண்டு நிலையாக வாழாமல் பருவக் காலத்திற்கேற்பத் தொடர்ச்சியாக இடம் விட்டு இடம் சென்று வாழும் மக்களே நாடோடிகள் (Nomads) எனப்படுவர். இவர்கள் இடம் பெயர்ந்து வாழும் முறை ஒரு முறைப்படுத்தப்பட்ட சுழற்சியாக இருக்கும். அதனாலேயே இவர்களை இடம் பெயர்ந்து வாழ்பவர்கள் என்று குறிப்பிடுவதில்லை. இடப்பெயர்ச்சி என்பது வாழிடத்தை முற்றிலுமாக மாறட்றிக் கொள்வதைக் குறிக்கும். ஆனால், நாடோடித் தன்மையானது ஓர் இடத்தில் தொடங்கித் தொடர்ச்சியாகப் பல இடங்களுக்குச் சுற்றித் திரிந்து மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேருவதாகும் நாடோடிகள் என்னும் சொல் விளக்கம் வேட்டையாடி உணவு சேகரிக்கும் நாடோடிகளையும், ஆயர் வாழ்க்கை நடத்தும் நாடோடிகளையும், தட்டுமுட்டு சாமான்கள் செப்பனிடும் நாடோடிகளையும், வணிகம் செய்யும் நாடோடிகளையும் குறிக்கும். சில நாடோடி இனத்தவர்கள் அவர்கள் செய்யும் தொழிலாலும் குறிக்கப்பெறுகின்றனர். குறிப்பாக , பிச்சையெடுக்கும் நாடோடிகள், குற்றவாளி நாடோடிகள், வித்தை காட்டும் நாடோடிகள், குறி சொல்லும் நாடோடிகள் என்றும் வாழ்வியற் களஞ்சியம் வரையறை தருகின்றது (1991:448).

அதாவது தமிழில் நாடோடிகள் என்பதற்கு பொருள் கொள்ள வேண்டுமெனில் 'நாடற்று அலைந்து திரிந்தவர்கள்' என்று பொதுவான விளக்கம் தரப்படுகின்றது. சிலவிடங்களில் நாடோடிகள் என்பதற்கு 'Gypsy' என்ற எகிப்திய சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், 'Gypsy' என்ற சொல்லிற்கு ரோமன் மொழியில் பேசிக்கொண்டு ஓரிடத்தில் தங்களாமல் அலைந்து திரிபவர்கள் என்று ஆங்கில அகராதி விளக்கம் தருகிறது. மேலும், ஆங்கிலத்தில் Roving, Vagrant, Itinerant person போன்ற பெயர்களும் அலைந்து திரிபவர்களைக் குறிக்கின்றன.

**அலைகுடிகள் - சில விளக்கங்கள்**

தமிழில் 'அலைகுடிகள்' என்ற சொல் மிகப் பரவலாக வழங்கி வருவதைக் காண முடிகின்றது. சங்க இலக்கியத்தில் 'பாணர்கள்' என்றும் கால நகர்வில் 'நாடோடிகள்' என்றும் சமகாலச் சூழலில் 'அலைகுடிகள்' என்றும் அழைத்து வருகின்றனர். இவ்வகை மூன்று சொல்லாடல்களும் வெவ்வெறு பொருண்மைகளை உடையது எனினும் இவற்றினை 'நாடோடியம்' (Nomadism) என்று பொதுமைப்படுத்திக் கூறலாம். 'மக்கள் சமூக இயங்கியலில் ஓரிடத்தில் நிலைத்துத் தங்கி வாழ்ந்தோரை நிலையான குடிகள் என்றும் இவர்களின் ஆதரைவைக் கோரியும் அண்டியும் வாழ்ந்தோரை அலைகுடிகள் என்றும் அழைக்கின்றனர்' (2013:12) என்ற பக்தவத்சல பாரதியின் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். இவ்வித வரையறை விளக்கங்களின்வழி 'அலைகுடிகள்' எனப்படுவோர் தம்முடைய வாழ்வியல் தேவைகளுக்காக, தனியாகவும், குழுவாகவும் அலைந்து திரிகின்ற வாழ்க்கையை உடையவர்கள் என்ற கருத்து பெறப்படுகிறது.

தமிழகத்தில் அலைகுடிகளாக சாட்டையடிக்காரர்கள், பாம்பாட்டிகள், குடுகுடுப்பைக்காரர்கள், பூம்பூம் மாட்டுக்காரர்கள், குறவர்கள், குறளி வித்தைக்காரர்கள், குரங்காட்டிகள், நரிக்குறவர்கள், கிளி ஜோசியக்காரர்கள், ஜங்கம பண்டாரம், மணியாட்டிக்காரர்கள், தோற்பாவை கூத்தினர், அனுமார் வேஷம் போடுபவர்கள், இராட்டினம் சுற்றுபவர்கள், அம்மி உரல் கொத்துபவர்கள் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட அலைகுடிகள் பெரும்பாலும் காடுகளிலும் மலைப் பகுதிகளிலும் வசிக்கவில்லை. சமவெளிப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

**வேர்களை இழக்கும் பழங்குடிகள்**

தமிழகத்தில் மொத்தம் 36 வகையான பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்ட தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையைச் சமூக நீதித் துறை என்று பெயர் மாற்றம் செய்த பிறகு தனது இணையப் பக்கத்தில் புதியதாக நரிக்குறவர், குருவிக்காரர் என்று ஒரு பழங்குடியைச் சேர்த்திருக்கிறது. தற்போது பழங்குடியினர் பட்டியலில் 37 ஆகிறது. அரசின் திட்டங்களாலும் முதலாளித்துவ நடவடிக்கையாலும் உண்மையான பழங்குடிகள், தங்களின் பூர்வீக இடங்களான மலைப் பகுதிகளை விட்டு வெளியேற்றப்பட்டு, தரைவாழ்ப் பகுதிகளில் குடியமர்த்தப்படுகின்றனர். இன்றைக்குத் தங்கள் பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்க முடியாதவர்களாகவும். சொந்த நிலங்களை இழந்தவர்களாகவும், தங்களின் பூர்வீகமான மலைக்குள் செல்லக்கூட அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு செல்ல வேண்டிய கட்டாயச் சூழலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வாழ்வாதார வசதிகளின்றி இருப்பதையும் காணமுடிகின்றது. அதாவது போதுமான குடிநீர், மின்சாரம், சாலை, கழிப்பறைகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பேருந்து என எந்த வசதிகளும் இன்றி அவதிப்படும் சூழல் இன்றளவும் இருந்து வருவதை யாரும் மறுத்துவிட முடியாது.

அதே போன்று பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டைப் பெறுவதற்காக, பிற வகுப்பினர் தங்களைப் பழங்குடிகளாகக் காட்டிக்கொள்கிறார்கள். பழங்குடிகள் என்று சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளும் நிலையையும் காண முடிகின்றது. ஆனால், பழங்குடி மக்களுக்கே அதிக பரிசீலனைக்குப் பிறகுதான் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. எனினும், இந்த சட்ட நடைமுறையில் மாற்றங்கள் கொண்டுவரப் பட வேண்டும் என்பதே நிதர்சனம்.

பழங்குடிகளின் மொழிகள் பண்பாட்டின் கூறுகளையும், பாரம்பரியத்தையும் பறைசாற்றக் கூடியவை. ஒவ்வொரு தமிழக பழங்குடியினருக்கும் தனித்துவமான கதைகள், வரலாறு, பாடல்கள், பழமொழிகள் உள்ளன. ஆனால் பழங்குடியினர் பேசக்கூடிய மொழிகளுக்கு அங்கீகாரம் இல்லை என்பதும் பழங்குடியினரின் இடம்பெயர்வு மற்றும் சமூக, பொருளாதார காரணங்களுக்காக பழங்குடியின மக்களின் மொழிகள் தற்போது அழியத் தொடங்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தமிழகத்தில் பழங்குடியினருக்கென்று தனித்த குறியீடுகளும் அடையாளப் பண்புகளும் பழைமைவாதமும் இன்றளவும் பேணத்தக்காக அமைந்திருக்கின்றன. பழங்குடியினர் என்பதற்கு இணையாக நாடோடிகள், அலைகுடிகள் போன்ற சொல்லாடல்கள் வழக்கத்தில் இருந்து வருகின்றன என்றாலும் அனைவரையும் பழங்குடிகள் என்று சொல்ல இயலாது. நாடோடிகளையும் அலைகுடிகளையும் நாடோடித் தன்மையை உள்வாங்கியவர்கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். இவர்களைப் பழங்குடிகள் வகைப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் அது வரலாற்றுப் பிழையாகி விடும்.

**துணைநூற் பட்டியல்**


1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி, 2013.
2. பக்தவத்சல பாரதி, பாணர் வரைவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி, 2015.
3. முனைவர் சு.ராஜேந்திரன், முதுவர் இனப் பழங்குடியினர், சேகர் பதிப்பகம், சென்னை, 2008.
4. கா. குகபாலன், இலங்கையில் பழங்குடிகள், பரணன் அசோசியேட்ஸ் (பி)லிமிடெட், கொழும்பு.
5. ஞா. ஸ்டீபன் (தொ.ஆ.) பண்பாட்டு வேர்களைத் தேடி நாட்டார் வழக்காற்றியல் மையம் பாளையங்கோட்டை 2020.
6. முனைவர் அ.மா. பரிமணம் (பொ.ஆ), வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 11, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.


*****